302

ஓம்

ஸ்ரீமுகை மங்கலம் ஸ்ரீ மாரியம்மன் பேரில்

# ஆனந்தச்சிந்தும், அற்புதபஞ்சகமும்.

இஃது
ஸ்ரீமத் தமிழ்ப்பபண்டிதராகிய
மாசிலாமணி தேசிகரவர்களின்
மாணாக்கராகிய
பாலபண்டித மாரியப்ப ஆசாரியாரால்
இயற்றப்பெற்றது.

THE REGISTRAR
10 JUL 1928



காரைக்கால் சோடாகம்பெனி அண்டு புக்ஷாப்பு
ஏ. எஸ். பழனிவேல் செட்டியாரவர்களால்

சென்னை திருவொற்றியூர்
நாகை. சரவண முதலியார் அவர்களது
கலைமகள் விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது

இதன் விலை] 1928 [அணா 1

# சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.




புருஷர்களுடைய நபும்ஸகம் அல்லது பேடிதனம் என்னும் துக்ககரமானகொடியவியாதியை அடியோடு தொலைத்துச் சிற்றின்ப சுகத்தை அவரவர்கள் இஷ்டப்படி அனுபவிக்கச் செய்வதில் இந்தச்சிட்டுச் குருவி சத்தின் லேகியமானது மிகச்சிறந்தது துரிதஸ்கலிதம். ஆண்குறி துவளல் முதலியமேகவெட்டை சம்பந்தமான வியாதிகளை இந்த லேகியமானது பத்தேவேளையில்முழுதும்குணமாக்கி நரம்புகளுக்கு மிக முறுக்கேற்றிப் பொருக்கமுடியாத சிற்றின்ப சக்தியைத்தருவதில்இதற்குமிஞ்சின லேகியம்வேறொன்றில்லைஎன்றுநாம் உறுதியாகச்சொல்வோம். இளைத்த தேகத்தை புஷ்டியாக்கி, கைகால் ஒச்சல் இடுப்பு விட்டுப்போதல் மேகவாய்வு தூர்த்த ஸ்திரீகளினுண்டான கொருக்கு முதலிய கொடிய வியாதிகளைக் கண்டித்து தினந்தோறும் மலத்தைப்போக்கி, தேகத்துக்கு வலிவையும் இந்திரிய புஷ்டியையும் இழந்து போன சிற்றின்ப சுகத்தை திருப்பிக் கொடுப்பதில் இந்த சிட்டுக்குருவிசத்தின் லேகியமானது முதன்மையானதென்பதைஎமது அனுபவத்தில்கண்டு தீர்மானிக்கிறோம்.

இழந்துபோன சிற்றின்பசுகத்தை ஒருவன் மறுபடியும் அடையவேண்டுமானல். சிட்டுக்குருவி சத்தின் லேகியத்தையே புசிக்கவேண்டும். தாதுவிர்த்திக்கு இதைவிடச் சிறந்ததும் மேலானதும் சமத்துவமுடையதும் வேறொன்றுமில்லை.

இந்திரிய சத்துக்குறைந்துபோயிற்று. அல்லது நீத்துக்கெட்டுப்போய் விட்டது என்று எப்போது தெரிந்ததோ உடனே ஒருகிஷணமும் சும்மா இராமல், இந்திரியம் பழையபடி உண்டாகக் கூடியஒளஷதம் எது என்றுதேடி வைத்தியசாஸ்திர பண்டிதர்களால் கிரமப்படி கைபாகம் செய்பாகம் தவறாமல் செய்து முடித்ததாகவும் இருக்கவேண்டும்.

போலிப் பண்டிதப் பொய்யர்களாகிய வைத்திய வாசனையேயில்லாத;சில தாந்தோன்றித் தம்பிரான்கள் வெளிப்படுத்தும் விளம்பரங்களைக்கண்டு கண்ட மருந்துகளை வாங்கித்தின்று உங்கள் பொன்போன்ற தேகத்தைக்கெடுத்துகொள்ளாதீர்கள்.

48-நாள் சாப்பிடக்கூடிய லேகியம் அடங்கியசேர் 2-க்கு 4 0 0

ஷை 24-நாள் லேகியம் அடங்கியசேர் 1-க்கு ரூபா- 2 0 0

எமது விலாசம்:— 2, சேர் வாங்குவோருக்கு போஸ்டேஜ் இனம்.

எம். டி. கார்த்தர் அண்டு கோ மிண்ட் போஸ்ட், மதராஸ். இ.

ஓம்

ஒழுகைமங்கலம் ஸ்ரீ மாரியம்மன் பேரில்

# ஆனந்தச் சிந்தும்
# அற்புத பஞ்சகமும்

10 JUL 1928
MADRAS

இஃது

ஸ்ரீமத் தமிழ்ப்பண்டிதராகிய

மாசிலாமணி தேசிகரவர்களின்

மாணாக்கராகிய

பாலபண்டித மாரியப்ப ஆச்சாரியாரால்

இயற்றப்பெற்றதை

காரைக்கால் சோடாகம்பெனி அண்டு புக்ஷாப்பு

ஏ. எஸ். பழனிவேலுசெட்டியார்

அவர்களால்

சென்னை திருவொற்றியூர்,

நாகை. சரவண முதலியாரவர்களது

கலைமகள் விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது

இதன் விலை] 1928 [அணா 1

ஓம்

ஒழுகை மங்கலம் ஸ்ரீமாரியம்மன் பேரில்

# ஆனந்தச்சிந்தும்

# அற்புதபஞ்சகமும்.

### காப்பு நேரிசை வெண்பா.

சீர்கொண்ட வேணியரன் செல்வச்சுப புத்திரனே
கார்கொண்டல் மேனிக் கஜானனனே-பூக்கொண்ட
வாவிகள்முன் சூழொழுகை மங்கலத்தாள் சீர்பாட
நாவினில் முன்வாசீ நயந்து.

### திருஆசிரியவிருத்தம்.

சீரோங்கிய ஜெகமதனில் பேரோங்கி மகிமையோடு
  ஜெயவிருது கொண்டமாரி
தீராதஎவல் வஞ்சனைபில்லி சூனியமும்
  தீர்க்கவென வந்த மாரி
பேரோங்கு மிந்திராதி தேவர்களும்மிப்பொது
  பேணித் துதிக்கு மாரி
ப்ரணவசொரூபியாய்த் தரணிமிசை தோன்றியே
  பெருகி விளையாடு மாரி
ஏரோங்கும் பஞ்சாக்ஷரத்தபசில் வீற்றிருந்
  தெழிலரசு புரியு மாரி
எக்காலுநீங்காமல் முக்கோண மன்றுளே
  இதநடனம் புரியு மாரி
ஊரோங்க யடியவர்கள் பேரோங்க
  தர்மமும் ஒங்கவருள் புரியு மாரி
உலகுபுக ழதிகாரி இலகுசுரர் மதிவீரி
  ஒழுகைவளர் மகமாரியே.

### ஆனந்தச் சிந்து,

பூமணக்கும் புன்னைவனஞ்சூழும் செழும்
பொன்னொழுகை மங்கலத்தில் சன்னயமாய் வாழும்
சீர்மணக்குஞ் செல்வமகமாரி அவள்
செம்பதங்களிரண்டையும் நம்பிமிகப்பாரில்
வேண்டியதபோல் பிணிகள் நீங்க வெகு
விந்தையுடன் காவடிகள் கொண்டுபிரார்த்தனைகள்
தாண்டவிபரன் சன்னிதியாக்சேர்ந்த சிவ
சக்ரான்மதனே யெங்களைக்காரணை நாக்க

நன்னயக்சலேமகளே தாயே ஏந்தச்
நாவினிலிருந்து வரமேனியருள்வாயே
வர்ணமயிலேறுமுருகையா நீயும்
வந்தருள்புரிந்திடுவாய் கந்தமலர்மெய்பா
ஆயிமகமாரியுமைதாயே மிக
அன்புடனேன்னெங்களுக்கு அருள்புரிவாயே
தூயதிருகங்கையில்நீராடி நல்ல
சுத்தமஞ்சள்தோய்த்திட்ட வஸ்திரத்தைதரு
சுத்தமுடன் விபூதிதரித்து உத்தன்
தூயதிருநாமமதைநேயமாயுர்சரித்து
பக்திவிசுவாசமதுவோங்கு திருப்
பாதாரவிந்தமதைப்பணிந்தோமோரங்கள்
சொன்னபடியலகுநள் தாயே ஒரு
தொந்தரவுமில்லாமல்லை ரந்தர்கட்குநீயே
நன்னயமாய்போடவருள் தருவாய் உயர்
நாதாந்தசிற்பரையேவேதாந்திவருவாய்
சத்திகிருபாசரீயேவாலா எழில்
தயங்குதிருமேனியுள்ள புங்கவியேவ வா
சித்திதரும்பிகையேவாவா உயர்
தேவரெல்லாம்போற்றுகின்ற தேவியரேவாவா
வேப்பிலையும் பொற்பிரம்புங்கொண்டு திரு
விபூதி [illegible] முன்புவந்துநின்று
பூப்போல லகிறங்கந்தாயே வந்த
பொங்கடமுன் அங்கமதில் தங்கியருள்வாயே
ஈஸ்பரியுன்னருளின்றியம்மா பெரும்
இரும்புச்சிலாகைளு மிறங்குமோசும்மா
தேசுபெருஞ் சங்கிலிகள்பூட்டி அன்பர்
தேகமெங்கும்பால்செம்பு தூண்டில்மா [illegible]ட்டி
பாரமுள்ள தோணைத்துக்கூட்டி மிகப்
பக்ஷமுடனிழுத்திடக் கஷ்டமெலாம் [illegible]ட்டி
தூரமுள்ளஉத்தன் கோவில்வந்துசேர வெகு
துரிதத்தில்வந்தருள்வாய்துன்பமதுதீர
நாரசலேயொரு செயலாமோ பெரு
நாகாவகுந்தானலகும் நாட்டிவிடப்போமா
சூரர்களுமுன் னருளைக்கொண்டு அந்த
சொர்காரதிபத்தியமும் பெற்றாரேயன்று
ஓம்நமசிவயலயமாரி ஓம்
உன்னதஏகாக்ஷாத்தி நன்ஜயகெம்பீரி
ஓம்ஐயுங்கிலியும்ராரா ஓம்
ஓம்சவ்வும் ஸ்ரீயுமரீயும்ராரா

ஸ்ரீராமசூவென்று தினம்
நீங்காமல்மனமும் பின்வாங்காமல்நின்று
பாரிலுனைத் துதிப்பவர்க்கு நின்
பரிபூரணகிருபை தருவாயேயெனக்கு
ஆதரவுவே றொருவரில்லை உனை
அண்டியவெங்களுக்கு அகற்றுவாய்தொல்லை
வாதபித்தஐய மெனும்மூன்றால் வந்த
வன்பிணிகளறுத்துநீ மைந்தர்களையாண்டாய்
அதுவுமுனக்குப் பெரிதல்ல உன்
அற்புதமகத்துவத்தை யிப்புவியின்சொல்ல
எதுவுமுனக்கும் பெரிதாமோ ஜெக
தீஸ்பரியுனைப்புகழ் எவராலும்போமோ
கெடுமடையர்கள் சிலபேர்கள் பிறர்
கெட்டிடவேசூனியங்கள் தொட்டுமேசெய்வார்கள்
படுகின்றமாரணங்கள் செய்வார் கொடும்
பாதகர்கள்மயங்கிடப் பேதனமுஞ்செய்வார்
கூட்டுறவுகலைத்திட. வெண்ணி அவர்
கூசாமல்கெட்டவித்து வேஷணமும்பண்ணி
நாட்டிலேகலக முண்டாக்கி அந்த
நாதியற்றசண்டாளர் நல்லறிவைபோக்கி
உன்பாதம்நம்பு மடியார்மேல் துஷ்ட
ஒட்டுபில்லிசல்லியங்கள் வைப்பார்கள்பார்மேல்
சண்டாளர்செய் வினைகளெல்லாம் அருள்
சத்தியுனடியவர்முன் கத்தியதுவெல்லாம்
ஆதவனைக்கண்ட பனிபோலே அவை
யஞ்சியேநடுங்கி யுனைக்கெஞ்சிடமென்மேலே
பூதலத்துக் கப்பாலேயோட்டி அந்தப்
பொல்லாததுஷ்டரையும் நில்லாமல்வாட்டி
பக்தர்களை ரக்ஷிக்குந்தாயே நீ
பக்கத்துணையிருந்து பாதுகாப்பாயே
பொற்கரத்துள்ளமர்ந்த ஜோதி மிகப்
புண்ணியகுலத்துதித்த கன்னயநல்லாதி
உன்னததலத்தாலே நீயே அந்த
ஊத்துக்காடென்னுந் திருவூரிற்பிறந்தாயே
மன்னிடவுன் மகிமையினாலே யிந்த
மானிலத்துக்கொரு தெய்வமானாயன்பாலே
சமயபுரத்தி லமர்ந்தாயே பாம்பு
தாலாட்டகண்ணபுரம் சாதித்தாய்நீயே
விமலியமலி யதிகாரி அந்த
வீராம்பட்டணமென்னும் ஊராளும்மாரி

சிற்றுடுக்கை சப்தமதுகேட்டால் கொடுந்
தீவினைகள்பறக்குமே மேவியயிந்நாட்டில்
புத்தரவக்கங்கணத்தினாளே இந்தப்
பூமியெங்கும்போற்றுகின்ற பொன்னெழுகையாளே
தாயேயுன் பிறப்பறியார்கள் பெருந்
தாரணியில்பலவிகஞ் சாற்றிடுவார்கள்
யெயிலேலநீயொருத்தி யென்பார் செத்த
பிணத்துடன்சுடலையில் புறண்டவளென்பார்
ஆயியுந்தன் முறபிறவிதன்னில் உன்
அரும்பெருந்தன்மையுமே ஆராயவெண்ணி
தேவதிருமூர்த்திகளும் வந்து அம்மா
நிர்வாணபிக்ஷையென்று கோரகின்று
கேட்டுமவர் வாசலிலேயேற அவர்
செருவங்களடங்கியே உருவங்கள்மாற
நாட்டில்சிறு குழந்தைகளாக்கி நீ
நல்லமுலைப்பால்கொடுத்தாய் வல்லவிநல்வாக்கி
மூவருக்குந்நீயே தாயானாய் சில
மூழுமூடருன் மகிமை தெரியாமற்போனார்
பாரறிவா ருன்மகிமைதானே இனி
யாவர்க்குந்தாயென்றால் அல்லவென்பாரோ
மூவுலகு மூன் டிமைகொண்டு திரு
மூக்கோணபீடமதில் எக்காலும்நின்று
பூவுலகில் விளையாடினையே உன்
புத்திரர்க்குவந்தபிணி மெத்தவுந்தீர்த்தாயே
உன்னுடலைப் பெருகவிக்கம்மா இங்கு
ஒருதவிபுரிந்திட நேரிடுமோயெம்மால்
பொன்னாலேபுகழ் வென்னியாலே நாம்
போடுகிறோமலைகென்று புகன்றதினாலே
துணிந்தோமோ யுன்னருளைக்கொண்டு ஒரு
துன்பமணுகாமலென்முன்புவந்துநின்று
கருணைகடைக்கணருளகாட்டி எம்மை
காப்பாற்றவேண்டுகிறோம் கஷ்டமெல்லாமோட்டி
அவரவர்கள் வேண்டியதுபோல வெகு
அழகானசவடிகள் புவியதின்மேல்
நவநயமாக அலங்கரித்து உன்
நல்லதிருநாமத்தை சொல்லியேயுச்சரித்து
பாற்காவடிக ளொருபக்கம் நல்ல
பன்னீரின்காவடிகள் பின்னுமொருபக்கம்
தேர்க்காவடிக ளொருபக்கம் கொம்புத்
தேன்காவடிகளும் பின்னுமொருபக்கம்

சந்தனக்காவடிக ளொருபக்கம் நல்ல
செவ்விளநீர்காவடிகள் செல்லுமொருபக்கம்
பஞ்சாமிர்தவகைகள் சேர்த்து வரும்
பக்தர்களின்காவடிகள் பண்பாயொருபக்கம்
எண்ணெய்காவடிக ளொருபக்கம் தூய
இன்பதயிர்க்காவடிக ளொருபக்கம்
பலவிதகாவடிக ளெல்லாம் மிகப்
பரிவுடன்கொண்டு வருமடியார்களெல்லாம்
வந்துநெருங்கிப் பதம்பாடி உனை
வாழ்த்திப்பரமானந்தக் கூத்துகளாடி
தொந்தோமென வாத்தியமுழக்க உன்
தொண்டர்களுஞ் சந்நிதியில்கொண்டாடி
இத்தனைவைபவங்களுங்கண்டு நீ
இருக்கின்றகோவிலில்லையெனிபோங்கள்வந்து
சித்தருடன் காவடிகளைச்சேர்க்க அங்கு
சேர்வதெப்படியென்று தியங்கிநிற்குமாங்கள்
அம்மாநீயெங்கள் பயந்தீர்ப்பாய் உம
தன்புடனேயெங்களையும் ஆதரித்துக்காப்பாய்
தாயேநீதாமதம் செய்யாதே மிக்க
தயவுடன்வந்தாளத் தடையேதும்யேதே
பால்பன்னீ ரபிஷேகங்களாடி திவ்ய
பஞ்சாவமிர்தங்களுஞ் சநதிரநாடனுடி
கோலவாளநீர்கள் மிகவாடி நல்ல
கொம்புத்தேனபிஷேக மின்பமுடனுடி
நல்லெண்ணெயபிஷேகமாடி நல்ல
மணமிகுஞ்சந்தனமும் சொந்தமுடனுடி
பல்விதஅபிஷேகங்கள் கொண்டு உன்
பாலகர்க்குஆசீர்வாதம் சீருடன்கிண்டு
மிகவாழ்த்தி வரங்கள்கொடுத்தநீயே ஆயி
மகாசிவசமூந்திருப்பாய் ஒழுகையின்தாயே
வாழியுக்கன் மலரடிவாழி இந்த
வையகத்திலுன் னுடைய மெய்யடியர்வாழி
கடலொலிகரைநகர் வாஸன் தமிழ்
கற்றவர்க்குக்கற்றவர்க்கும் மற்றவர்க்கும்நேசன்
திடமாசிலாமணியின் சீஷன் ஆதி
செப்புதமிழ்க் கவிமாரியப்பவிசுவாஸன்
சொன்னதமிழ் சொல்லோருவாழி அதைச்
சொல்லிடக்கேட்பவருந் தொல்லுலகில்வாழி
பன்னுமறைவாழி யறூர்வாழி இந்தப்
பாரிமிசையெல்லோரும் சிறுடனேவாழி
ஆதிமகமாரியுமை தாயே.

## விருத்தம்.

மாதவி தபசப்சி சதானந்த நித்தியகல்யாணி
　மங்களா கரி சுந்தரி
மாதங்கியமலி பூலோகாதி பத்தியம்
　வாய்ந்த கிருபாசர கரி
தாதவிழ லங்கணி தரு ஜடாதரி
　நீலிசத்தி சந்தான கௌரி
சத்துரு சங்கார ஜெயசாஞ் வல்ய
　திரிசூலி தத்துவாதீத முதல்வி
சிதவிகஜித கமலதிவ்ய செழுவதனத்
　திகம்பரி பரம்பரி தினஞ்
சித்திக்கு மன்பர்தஞ் சிந்தைக்கு
　னருணடனஞ் செய்யுந்திருத் தாண்டவி
ஓதவிரி கடல்சூழு முலகி னுன்மகிமை
　யென்னொரு நாவினோ தராமோ
உலகுபுக ழதிகாரி இலகுசுரர் மதிவிசி
　ஒழுங்கைவளர் மகமாரியே.
அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஒ ஓ ஔ வென்றும்
　ஆரிரண்டு யீரெழுத்தும்
அரியநமசிவயவெனு மைந்தெழுத்துவும்
　ஓம்ஐயுங்கிலியும் சவ்வுடன்
மகாஸ்ரீயும்ரீயும் ராராவென்றுன்மகா
　மந்தரம்வாயார புச்சரித்து
வந்தித்துன்சன்னதியில் சிந்திக்குமன்பர்களும்
　வரிசையினில் நிற்பர்கோடி
மகாநந்தமுடனே சதானந்தயோகியர்கள்
　மாதவம் புரிவர்கோடி
மேலானபஞ்சலட்சண கவிஞர்புகழ்பாடி
　மேனித்துதிப்பர்கோடி.
உசாதவத்துத்தமர்கள் சொற்கேட்டு
　மகிழ்வின்றுடன்காதிலென் சொல்புகுமோ
உலகுபுசழதிகாரி இலகுசுரர்மதிவிசி
　ஒழுங்கைவளர் மகமாரியே
பலவிதமுமுன்னைப் பழித்துக்கெடுமொழிகளும்
　பகருவார்சில துஷ்டர்கள்
படுபாவிகளைகெடிய பல்லைப்பிடுங்கிப்
　பருந்தாட்ட மாட்டவைத்து
அலகைவெடுகோய் நரிக்கிரைபாகஅவ
　ருடலைஅடல்வாளில்வீசியெறிவாய்

அம்பிகையுன்னிரு பாதம்நம்பிவரும்
ஏழைகளை ஆதரித் தடிமைகொண்டு
நலமுடனனேகவித நல்வரமளித்திடும்
நாயகியுன் மைந்தனுரும்
நாளுமுன்னடைக்கலம் ஞானமருளன்னையே
நன்மைதந்தாண்டு கொள்வாய்
ஒலிமிகுசிலம்பலம் புயர் தாணிஜெயசீலி
உத்தமிகடாக்ஷ முதல்வி
உலகுபுகழதிகாரி இலகுசூரர்மதிவீரி
ஒழுகைவளர் மகமாரியே
அட்டவித குணமெட்டு யெட்டுவித காசமும்
அறையு மென்பது வாதமும
அருமேக மூவேழு காக்கைவலி குதிரைவலி
யாதியாம் பிணிகளெல்லாம்
கிட்டவினை யணுகாம லிஷ்ட்டகாமிய மீய்ந்து
கெடுமொழிகள் பேசுகின்ற
துஷ்ட்டர்களை வாட்டி யுன தன்பர்
துயரோட்டி பரிசுத்தஜன னுறவுகூட்டி
துன்ப மிகுமென் வறுமைதன்னைத் துலைத்து
நற்சுக செல்வமிங் கருளுவாய்
உற்றதுணை நீயலது ஒருவ ருண்டோ
வுலகில்உனது மலரடிகள் சரணம்
உலகுபுக ழதிகாரி யிலகுசூரர் மதிவீரி
ஒழுகைவளர் மகமாரியே.

ஆனந்தச்சிந்தும் அற்புதபஞ்சகமும், முற்றுப்பெற்றது.

பந்துஅவதாரபடங்களும் அஷ்டோத்திரமும் அடங்கிய
மகாவிஷ்ணு

## தசாவதாரத் தியானம்.

இதில் ஒவ்வொரு அவதாரங்களுக்கு பாட்டுகளும் அதன்பின் அவதாரத்தினுடைய வரலாறும் ஸ்ரீமகாவிஷ்ணு ஆராதனக்கிரமங்களும் அஷ்டோத்திரமும் இதில் அடங்கி இருக்கின்றன இதை எப்போதும் தியானம் செய்யும்பொருட்டாக பாக்கெட்சைசில் கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு இருக்கிறது இதன் விலை அணா 4

எமது விலாசம்:—

டி. ஆர். கிருஷ்ணு அண்டு கம்பெனி,
திருவொற்றியூர் போஸ்டு மதராஸ்.

# அயக்காந்த சத்தின் திராவகம்.



இரும்பைப் பார்க்கிலும் கடினமான லோகம் வேறொன்றுமில்லை தாதுவிர்த்திக்கு இதுவே சிறந்தது இரும்பின் சத்தை உண்டவனுக்கு, நரை திரை உண்டாகாது பொன்: வெள்ளி, முதலியவைகள் அந்தச் சமயத்தில் மட்டும் அதிக குணத்தைக்கொடுத்து, சீக்கிரத்தில்தேகத்தைக்கெடுத்துவிடும். இதனால் தான் இருப்பவன் இரும்பைத் தின்றால் போறவன்பொன்னைத்தின்பான் என்று இவ்வுலகத்தில் சொல்லிக் கொள்கிறார்கள் ஒருவன்இந்தத்திராவகத்தைச் சாப்பிடுவதற்குமுன் தன் தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக்கொண்டு அதன்பின் இந்த திராவகத்தைஒரு மண்டலம் 48-நாள் சாப்பிட்டு மறுபடியும் திராசில் நின்று நிறுத்துப்பார்த்தால் முன்னிருந்ததற்கு 40-பலம் அதிகநிறையிருப்பான்.

தாது விர்த்தியில்லாதவர் இரும்பைப் பழுக்காய்ச்சி அதை ஜலத்தில் துவைத்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்துவந்தால் தாதுவிர்த்தி உண்டாகுமென்று வைத்திய சாஸ்திரம் கூறுகின்றது. அதற்கே அந்த குணம் இருக்கிறபோது அயத்தினுடையவும் காந்தத்தினுடையவும்சத்தைத்திராவகமாகஇறக்கி யிருக்கும் இந்தப் பரமசிரேஷ்டமானஔஷதத்தை உட்கொள்பவர் தேகம் வஜ்ஜிர சரீரம் ஆய்விடுமென்பதற்கு என்னதடை?

பால்யர், யௌவனர், விருத்தர், முதலிய ஆண், பெண், இருவரும் புசிக்கலாம். இது எல்லாதேகத்திற்கும், பொதுக்குணம் செய்வதாகும் இந்ததிராவகம் உட்கொள்ள வேண்டிய முறைஅளவுமுதலிய விவரங்கள் பத்திய நோடீசில் விவரமாகத்தெரியும் (அரைமண்டலம்) 24-நாளைக்கு வரக்கூடிய ஒரு புட்டியின் விலை ரூபா 1 0 0

(ஒருமண்டலம்)40-நாளைக்கு வரக்கூடியஒரு புட்டியின் விலை 2 0 0

## லிங்கஸ் த்ரால்னி

நாடிநரம்புகளை முறுக்கேற்றும் மருந்து இதைவிட உயர்ந்தது கிடைப்பது கஷ்டம் லிங்கஸ்தாலனி என்னும் ஔஷதத்தை தளர்ந்துபோன நரம்புகளின்மீது பிரதிதினமும் ஒரு வேளை தடவிவரின் 10-நாளில் நல்ல குணம் தரும். இது புருஷர்களுக்கு உபயோகப்படுமேயன்றி பெண்களுக்கு உபயோகப்படாது யிதை உபயோகிக்கும்போது அநேக அற்புத குணங்கள் தோன்றும்.

1-புட்டியின் கிரயம் ரூபா 1 0 0

விலாசம்.— எம். டி. கார்த்தர் அண்டு கோ. மிண்ட் போஸ்ட், மதறாஸ், இ.

# மனமோகன சகுந்தலா கூந்தல் வளரும் பரிமளத் தைலம்

ஆழாக்கு எண்ணெ கொண்ட புட்டி 1-க்கு

6-வித இனாம் சாமான்களுடன் விலை ரூபா 1 0 0



அதிக பரிமள முடைய இத்தைலத்தில் கொஞ்சமெடுத்து தலைமயிர் உற்பத்தி ஸ்தானங்களில் தடவிவாரிக்கொண்டு வந்தால்மயிரானது செழிப்பாகவும் ஆலம்விழுது போல ஓங்கி வளரும் மயிர்க்கால்களுக்கு குளிர்ச்சியைக் கொடுத்து சிறந்த நிறத்தையும் மயிர் வெடிப்பு மயக்கம் தலைசுற்றல் தேகத்திலுள்ள சொரி சிரங்கு வியர்வைநாற்றம் கற்றாழைநாற்றம் மனச்சஞ்சலம், ஞாபக மறதிமுதலிய வியாதிகளைக் கண்டித்து கண்ணுக்குகுளிர்ச்சி தருவதுடன் சுகந்த பரிமள வாசனையையும் தேகத்தில் மினுமினுப்பையும் தரும் இத்தைலம் அநேக பிரபுக்களால் நன்கு மதிக்கப்பட்டு சர்ட்டிபிகெட்டுகளும் பெற்றிருக்கிறது இனாம் சாமான் விபரம்:— ஜெர்மனி தேசத்தில் செய்ததந்தசீப்பு 1, முகம்பார்க்கும் விசித்திரகண்ணாடி 1 பெண்கள் தலையில் வைத்துக் கொள்ளக் கூடிய கொண்டைப்பூ 2, கொண்டைக்கிளி 2, ஆக 6-விதசாமான்கள் கொடுக்கப்படும்

தீராதெனக்கைவிடபட்ட

## மேக வெள்ளைக்கு மேககுலாந்தக மாத்திரை.

ஐயா:— தற்காலத்தில் வமாதர்களின் கூட்டுறவால் மேக உஷ்ணமதிகரித்து அதன் நிமித்தம் உந்திக்கமலத்தில் அதாவது தொப்புளின் உள்புறத்தில் ரணமுண்டாகி அதன் மூகாந்தரமாய் சீழ் ரத்தம் உண்டாகி நீர் துவாரத்தின் வழியாய் வருவதின் நிமித்தம் அநேக வைத்தியன் மார்கள் மூலமாய் மருந்துகள் தருவித்து சாப்பிட்டும் குணமடையாதபடி தேகத்தில் லவரி பின்னர் நரம்புதட்டும் மற்றி கடைசியாக விருத்தாப்பிய திசையிலேயோ அல்லது அந்தத் தருணத்திலேயோ தூர்த்த ஸ்ரீகளின் கூட்டுறவால், உண்டாகும், மேகம், மேகத்தாலுண்டாகும் மேக வெள்ளை, நீர்சுருக்கு நீர்தாரையினின்று சீழ் ரத்தம் வடிதல், நீரெரிச்சல் கெந்நாளாய் தேகத்திலுள்ள சிறிதுசிறிதாக சிலைநல்லகதல்லொகண்டு துன்பப்படுத்தும் ஒர்வித நீர்வெள்ளை மஞ்சள்வெள்ளை தந்திமேகம் முதலியவைகள் உண்டாகித் தன்வாழ்நாள் பரியந்தம் இந்த வியாதியை அடைவதும் தவிர ரொம்பவும் வருத்தத்தை அடைகிறார்கள் (இந்த வியாதி தான் மேகத்துக்கு அரசன்) ஆதலால் மேற்படி நோய்யுடைய ஆண் பெண் யாவரும் யாதொரு சந்தேகமின்றி உடனே அனுப்பித் தருவித்து சாப்பிட்டு சுகத்தை அடைவீராக அப்படி நோய் நீங்காவிடில் வாங்கிய பணத்தை வாபீஸ் செய்ய உத்திரவாதியாவோம்.

எமது விலாசம்:— டப்பி 1-க்கு ரூபா 2 0

எம். டி. கார்த்தர் அண்டு கோ., மின்ட் போஸ்ட், மதராஸ்.